1972 ஆகஸ்ட் 22]

Private Practice by Doctors

* 186 *Q*—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru N. SUNDARESA THEVAR) : Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 190 on the floor of the House on 24th August 1968—

(*a*) whether the Government are aware of the fact that the doctors employed in Government Hospitals, doing private practice are giving all facilites available in the Government Hospitals to the patients who come to their private clinic and that they do not pay proper attention to poor patients approaching Government Hospitals for treatment directly; and

(*b*) if so, the action taken and proposed to be taken by the Government in this regard ?

மருத்துவர்கள் தனித் தொழில் புரிதல்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. என். சுந்தரேசத் தேவர் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 24—8—1968-ஆம் நாள் சட்டமன்றத்தில் வினா எண் 190-க்கு அளித்த விடையினையொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு மருத்துவமனைகளில் சம்பளம் பெற்று பணிபுரியும் மருத்துவர்கள் தனித் தொழில் நடத்துவதால், அவர்களிடம் வரும் நோயாளிகட்கு வேண்டிய சகல வசதிகளையும் அரசு மருத்துவ மனையில் அளிப்பதும், நேரிடையாக அரசு மருத்துவ மனைக்கு வரும் ஏழை நோயாளிகளை கவனியாததையும் அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், (1) அரசு எடுத்த (2) எடுக்கவிருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) அரசாங்க மருத்துவர்கள் அலுவல் நேரம் தவிர மற்ற நேரங்களில் தனிப்பட்ட முறையில் நோயாளிகளைக் கவனிக்க (Consulting practice) அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் தனிப்பட்ட நோயாளிகளுக்காக அரசு மருத்துவ மனைகளிலிருக்கும் வசதிகளை உபயோகப்படுத்த அனுமதிக்கப்படுவதில்லை. இது சம்மந்தமாக வேறுவிதமாக நடப்பதாக புகார்கள் வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.